ISSN: 2320-4842
Vol-18 No. 01 January-March 2024

# ஜெயகாந்தன் படைப்புகளில் பெண்ணிய வெளிப்பாடுகள்

**பேரா ஆ. அடைக்கலராஜ்,**
தமிழாய்வுத்துறை,
தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி – 620 002.

**ABSTRACT**
Jayakanthan is one of the best literary writers of this era. He said that the people who were with him are the reason for the creation of such a creator. I was made a writer. Everyone asked me to write together and believed that I would write, and they put me on that path. They are not normal. They have studied Tamil. But they are also studying the world. From saying this, it is clear that those who supported his such personality were great people. He was inspired by the writings of Mahakavi Subramania Bharatiyar. Jayakanthan has created innovative women in his short stories that Bharathi saw. It would not be an exaggeration to say that the creation of forward-thinking women as narrators in his short stories is an amazing story.

**ஆய்வுச் சுருக்கம்**
இக்கால இலக்கிய படைப்பாளர்களில் ஜெயகாந்தன் ஒரு சிறந்த இலக்கியப் படைப்பாளி ஆவார். இப்படி ஒரு படைப்பாளி உருவாவதற்கு அவருடன் இருந்தவர்களே காரணம் என்று கூறியுள்ளார். நான் எழுத்தாளனாக ஆக்கப்பட்டேன். எல்லோரும் சேர்ந்து எழுதச் சொல்லி, நான் எழுதுவேன் என்று நம்பியும், என்னை அந்தப் பாதையில் மாற்றி விட்டார்கள். அவர்கள் சாதாரணமானவர்கள் அல்ல. அவர்கள் தமிழைப் படித்திருக்கிறார்கள். ஆனால் உலகத்தையும் படித்து இருக்கின்றார்கள். இவ்வாறு கூறுவதிலிருந்து அவரது இத்தகைய ஆளுமைக்கு உறுதுணையாக இருந்தவர்கள் மாபெரும் மனிதர்கள் என்பது புலனாகிறது. இவர் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் எழுத்துக்களால் ஈர்க்கப்பட்டவர். பாரதி கண்ட புதுமைப் பெண்களை ஜெயகாந்தன் தம் சிறுகதைகளில் படைத்துள்ளார். இவருடைய சிறுகதைகளில் முற்போக்குச் சிந்தனையுடைய பெண்களைக் கதை மாந்தர்களாகப் படைத்திருப்பது வியப்பின் சரித்திரம் என்றால் அது மிகையாகாது.

**திறவுச் சொற்கள்**
பெண், கற்பு, அடக்குமுறைகள், முற்போக்குச் சிந்தனை, நடப்பியல், வலிமை

## முன்னுரை

பெண்ணியம் என்றாலே ஆண்களை எதிர்ப்பது என்ற தவறான கருத்து சமுதாயத்தில் நிலவி வருகிறது. ஆண்களை எதிர்ப்பது என்பது பெண்ணியத்தின் நோக்கம் அன்று. அடிமைப்பட்டு வாழும் பெண்களுக்குக் கல்வியின் மூலம் விழிப்புணர்வு ஊட்டிச் சமுதாயத்தில் ஆண்களுக்கு இணையான மதிப்பினைப் பெற்றுத் தருவதே பெண்ணியத்தின் நோக்கம் ஆகும். ஆணுக்குப் பெண் நிகர் என்ற பாரதியின் கனவை மெய்ப்பிக்க வந்த கூற்றாகும். "பெண்கள் தங்கள் மீது ஏவிவிடப்பட்டிருந்த அடக்கு முறைக்கு எதிராக, தீர்க்கமாக எழுப்பிய குரலே பெண்ணியத்திற்கு எழுச்சியூட்டியது" (பெண்ணியம் அணுகுமுறைகள், ப. 17)

பெண்களின் மரபியல் போக்கு மாற்றம் பெற வேண்டும் என்பதையும், பெண்களின் ஆளுமை முக்கியத்துவம் பெற வேண்டும் என்பதையும் இந்தியப் பெண்ணியம் வலியுறுத்துகிறது. மேலும் பெண்கள் சமுதாயத்தில் சுய சார்புடையவர்களாக வளர வேண்டும் என்றும் கூறுகிறது.

 ISSN: 2320-4842
Vol-18 No. 01 January-March 2024

*பெண்களின் உரிமைகளை நிலைநாட்டுவதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளது. “மேலை நாடுகளில் பெண்ணியத்தின் தோற்றம் பகுத்தறிவு அடிப்படையில் அமைய, நம் நாட்டில், பெண்ணியம் சமூகச் சீர்திருத்தத்தின் அடிப்படையில் தோற்றம் பெற்றது எனலாம்” (பெண்ணியம் அணுகுமுறைகள், ப. 17)*

**ஜெயகாந்தனின் பெண்ணியச் சிந்தனை**

*ஜெயகாந்தனின் பெண்ணியம் இந்தியப் பெண்ணியத்தைச் சார்ந்தே அமைந்துள்ளது. அவர் திருமணம், குடும்ப அமைப்பு இவற்றைச் சிதைக்காத பெண்ணியத்தையே தம் சிறுகதைகளில் கையாண்டுள்ளார். “திருமணம் செய்து கொள்ளாமல் வாழும் தனிவாழ்வில் ஜெயகாந்தனுக்கு அவ்வளவு உடன்பாடு இல்லை. வாழ்க்கைக்கு ஒரு பொருளைத் தருவது திருமணமே என்பது அவருடைய கருத்து ஆகும்”(புனைகதைத் திறன், ப. 93). கற்பு பற்றிய மரபுவழிச் சிந்தனையில் மாற்றம் தேவை என்பதுதான் அவரது கருத்தாகும். இதனையே “நமது சமூகத்தில் ரொம்ப மூடர்கள் கற்பு என்பதற்கு இன்னதென்று விளங்காத எத்தனையோ குழப்பமான அர்த்தங்களை வைத்திருக்கிறார்கள்” (ஜெயகாந்தனின் முன்னுரைகள். (ப. 92) என்று குறிப்பிடுகிறார். உடல் ஸ்பரிசத்தால் மட்டும் கற்பு பங்கப்பட்டுப் போகும் என்றால் ஒவ்வொரு பெண்ணையும் ஒரு காப்ஸ்யூலில் போட்டுத்தான் அடைக்க வேண்டும். உடல் தொடர்பு அல்ல, உறுப்புத் தொடர்பினாலேயே கற்பு கெட்டுப் போகிறது என்று சில கொச்சை மனங்கள் நினைக்கின்றன. தற்காலத்தில் உறுப்புகளின் தொடர்பே இல்லாமல் உடலுறவு கொள்ள முடியுமாம்”(ஜெயகாந்தனின் முன்னுரைகள், ப. 94) என்று ஜெயகாந்தன் கூறுவதிலிருந்து கற்பு என்கிற கோட்பாட்டில் அவரது முற்போக்குச் சிந்தனையைத் தெளிவாக அறியமுடிகிறது.*

*சிறுகதைகளில் பெண் பாத்திரங்களுக்கு முக்கியத்துவம் வழங்கியிருப்பதற்கான அவசியத்தை விளக்குகிறார். “பெண்களின் நிலைமை என்பதிலேயே நான் என்னுடைய தாய், சகோதரி, அத்தைகள் ஏன் கம்யூனிஸ்ட் கட்சியிலேயே இருந்து எனக்குத் தெரிந்த பல பெண்கள் இவர்கள் எல்லாம் என்ன மாதிரித் துன்பப்படுகிறார்கள் எப்படிப் போராடுகிறார்கள் எப்படி அதிலிருந்து விடுபடுகிறார்கள் என்பதையெல்லாம் பார்த்ததன் விளைவாக வேறு யாரையும் விட அதிகமாகப் பெண்களைக் குறித்து எழுத வேண்டும் என்று எனக்குத் தோன்றயது”(நானும் என் எழுத்தும் ப. 233) என்று தெளிவு படுத்துகிறார். இதன் மூலம் பெண்களை மதிக்கும் ஆசிரியரின் பண்புநலனை அறிய முடிகிறது. மேலும் “ மாறாத சமூகத்தில் பெண்ணை விடப் பரிதாபச் சக்தியும் இல்லை என்கிற அனுபவம் இந்த நூற்றாண்டில் மனித ஜாதிக்கு வந்திருக்கிறது”(ஒர் இலக்கியவாதியின் கலையுலக அனுபவங்கள், ப. 6 என்று தெளிவுபடுத்துகிறார்.*

*பெண்மையைப் பற்றிக் குறிப்பிடும் போது“பெண்ணைச் சதையாகவும், கனவுப் பொருளாகவும் போகக் கருவியாகவும் கண்டு சீரழிந்து கொண்டிருக்கும் சில்லறைப் பேனாக்காரர்கள் மத்தியில், தாம் எழுதிய பல பக்கங்களிலும், பேசிய பல மணிநேரப் பேச்சுகளிலும் ஒரு போதும் பெண் அடிமை செய்யாத, நிஜமான அர்த்தத்தில் பெண் சுதந்திரக் கருத்தைச் சரியாகவும், அழுத்தமாகவும், மிக மிகக் கலாபூர்வமாகவும் வெளிப்படுத்திய மகத்தான புருஷன் ஜெயகாந்தன்” (நானும் எனது நண்பர்களும், ப. 66) இவ்வாறு அவருடைய எழுத்தைப் பயின்றால் பெண்மை வளர்ச்சியடையும். இளைஞர்கள் சரியான பாதையில் செல்வர்.*

 ISSN: 2320-4842
Vol-18 No. 01 January-March 2024

**முற்போக்குக் கருத்துடைய பெண்கள்**

சமுதாயத்தில் இயல்பாகக் காணக்கூடிய மகளிரைப் போலன்றிக் குறிப்பிட்ட சூழலில் தாக்கம் ஏற்படுகிறபோது வேறுபட்ட செயலும், சிந்தனையும் வெளிப்படுத்துகிற பெண்கள் முற்போக்குக் கருத்துடைய பெண்களாவர். இவ்வாறு தனித்தன்மை வாய்ந்த பெண் கதாபாத்திரங்களை மிக நுட்பமாக ஜெயகாந்தன் தமது சிறுகதைகளில் படைத்துள்ளது வியப்பின் சரித்திரமாகும். யுவசந்தி என்னும் சிறுகதையில் முதிய பிராமண விதவையாக வரும் கௌரிப்பாட்டி பழமையின் பிறப்பும், ஆசாரங்களில் நம்பிக்கையும் கொண்ட காலத்தில் வாழ்ந்தவளாக இருந்தாலும் இக்காலச் சூழலுக்கேற்ப புதிய சிந்தனை கொண்டவளாக மாறுவதை உணர முடிகிறது. தன் பேத்தி கீதா திருமணமாகி பத்தே மாதங்களில் கணவனை இழந்து விதவைக் கோலம் பூண்டாலும், அவளின் மறுமணம் செய்து கொள்ளும் எண்ணத்தை கௌரி பாட்டி ஆதரிக்கிறாள். மற்றவர்கள் எதிர்க்கின்ற சூழலிலும், ஆசார யுகத்தில் வாழ்ந்த கௌரிபாட்டியின் முற்போக்குச் சிந்தனை மேலோங்குகிறது. "கௌரிபாட்டி தனது இறந்த காலத்தின் நிகழ்காலப் பிரதிநிதியெனத் தன்னையே அவளில் கண்டாள்" (ஜெயகாந்தன் சிறுகதைகள் தொகுதி 2, ப. 110) கணவன் இறந்தவுடன் வாழ்வே முடிந்துவிட்டது என்று கருதும் பெண்கள் மத்தியில், முன்னேறும் வழியில் செயல்பட நினைத்த கீதா மற்ற பெண்களிலிருந்து வேறுபட்ட ஆளுமை உடையவளாகிறாள். சுய சிந்தனையுடையவளாகத் தோற்றமளிக்கிறாள்.

ஜெயகாந்தனின் புதிய வார்ப்புகள் என்ற சிறுகதையில் வரும் தாய் குஞ்சம்மாள் தன் மகளின் காதலை முதலில் வெறுத்தாலும், பிறகு அவளின் நிலையை அறிந்தவளாய் அவளுடைய காதலனுடன் அனுப்பி விடுகிறாள். குஞ்சம்மாளின் மாமியார் – மருமகளின் இந்தச் செயலால் கோபம் கொண்டாலும், அவளின் விளக்கங்களைக் கேட்ட பின்பு மனம் மாறுகிறாள். பேத்தியின் நிலையையும், மருமகளின் எண்ணத்தையும் புரிந்து கொள்ளும் நிலையை மிக நுட்பமாக ஆசிரியர் பதிவு செய்கிறார்.

நூலாசிரியரின் அடுத்த கதையான பௌருஷம் என்ற சிறுகதையில் வரும் ரங்கம்மாள் தம் கணவரைத் தெய்வமாகக் கருதும் இயல்புடையவளாக இருப்பதை அறிய முடிகிறது. தன் கணவன் தவறு செய்கிறான் என அறிந்ததும், இதுதான் தலைவிதி என்று நினைக்கும் பழமைவாதியாக இல்லாமல் அவனை உதறி விட்டுவரும் முற்போக்கு ஆளுமையாகத் திகழ்வதை நூலாசிரியர் தெளிவுபடுத்துவது கதையின் நோக்குநிலையை அறிய முடிகிறது.

அக்கினிப் பிரவேசம் என்ற கதையில் வரும் தாய், கற்பிற்கு முக்கியத்துவம் தரும் சமூகத்தில் – காலச்சூழலில் வாழ்ந்தவளாக இருந்தாலும் மரபுகளிலிருந்து விடுபட்டுத் தன் மகளை வாழ வைக்கிறாள். தன் மகள் எவனிடமோ கற்பைத் தவற விட்டதைக் கூறும் பொழுது, கற்பு என்ற கோட்பாட்டில் தன் மகளின் வாழ்வு சிதைந்து விடக் கூடாதே என்ற தவிப்பில் "அந்தத் தாய் உடனே அவள் தலையிலே ஜலத்தைக் கொட்டி, குளிப்பாட்டி அதையே ஒரு அக்கினி பிரவேசமாக்கி, நல் உபதேசங்கள் கூறி, இனி வருங்காலத்தில் இது போன்று நிகழ்ச்சி நடைபெறாவண்ணம் பார்த்துக்கொள் என்று எச்சரித்தாள்" (நானும் எனது நண்பர்களும், ப. 53) மேலும் "வாழை ஆடினாலும் வாழைக்குச் சேதம் என்று பொங்கி வந்த ஆவேசம் தணிந்து, பெண்ணினத்தின் தலை எழுத்தையே தேய்த்து அழிப்பது போல் இன்னும் ஒரு கை சீயக்காயை அவள் தலையில் வைத்துப் பரபரவென்று தேய்த்தாள்" (ஜெயகாந்தன் சிறுகதைகள் தொகுதி 2, ப. 402). அந்தத் தாய் பெண்ணினத்தின் பிரதிநிதியாகத் தோற்றம் பெறுகிறாள். தவறிய மகளைத்

 ISSN: 2320-4842
Vol-18 No. 01 January-March 2024

தாயின் செயலே அக்கினிப் பிரவேசமாக அமைந்து அவளின் எதிர்கால வாழ்விற்கு விழிப்பூட்டியது எனில் அது மிகையாகாது.

ஜெயகாந்தனின் ஹீரோவுக்கு ஒரு ஹீரோயின் என்ற கதையில் வரும் மதுரம் தன் கணவன் சீதாராமன் மேல் மிகுந்த பக்தியும், பாசமும் கொண்டவள். சீதாராமன் தன்னுடன் பணியிலிருக்கும் கமலா என்பவளைத் திருமணம் செய்ய எண்ணி அவளுக்கு ஒரு குழந்தையையும் கொடுத்து விடுகிறான். கமலாவின் வருவாயை முன்னிட்டே இத்தகைய தகாத செயலைச் செய்கிறான். இது ஆணின் சுயநலத்தைக் காட்டுகிறது. இதை அறிந்த மதுரம் வாழ்க்கையில் தன்னுடைய ஏமாற்றத்தை எண்ணி, இயல்பு பண்புகளிலிருந்து மாற்றம் பெற்றுப் புதுமைப் பெண்ணாகத் தோன்றுகிறாள். அவளின் கோபம் கமலாவின் மேல் அல்ல. சுயநல சிந்தனை கொண்ட தன் கணவன் மேல் இருந்தது. மதுரத்தின் முடிவு கமலாவின் முடிவையும் மாற்றுகிறது. ஜெயகாந்தனின் படைப்பில் ஒரு பெண்ணின் ஆளுமை இன்னொரு பெண்ணையும் விழிப்படையச் செய்கிறது. கணவனின் தவறுகளை இதுதான் விதி என்று ஏற்று வாழும் மனைவிகள் மத்தியில் இந்த மனைவியின் ஆளுமை போற்றத்தக்கது.

நூலாசிரியர் பெண்களை மாறுபட்ட கோணத்தில் ஆசிரியர் படைத்திருப்பது சமுதாயத்தில் பெண்களின் மீது கொண்ட பற்றினை அறியமுடிகிறது. ஆணின் வக்கிரங்களையெல்லாம் பொறுத்துக் கொண்டுதான் ஒரு பெண் வாழவேண்டும் என்கிற சமுதாய நிலையைக் கட்டுடைக்கிறது. “பெண்களைப் பற்றி எவ்வளவு உயர்வாக எழுத முடியுமோ அவ்வளவு உயர்வாக எழுதியதாகவும், பெண்களைப் பொக்கிஷமாகக் கருதுகிறேன்” (புதுத்தமிழ்க் கட்டுரைகள், ப. 73). இவ்வாறு கூறுகின்ற அவரது கருத்துக்களின் மூலம் பெண்களை மதிக்கும் ஆசிரியரின் படைப்பாளுமையை உணர முடிகிறது.

**முடிவுரை**

ஜெயகாந்தனின் படைப்பில் முற்போக்குச் சிந்தனையுடைய பெண்கள் படைக்கப்பட்டுள்ளனர். பழமைப் போக்கில் ஊறிய பெண்கள் புதுமை படைப்பாளர்களாக உருவாகின்றனர். இப்பெண்களைப் பெரும்பாலும் அனுபவ முதிர்ச்சி உடையவர்களாகவே ஆசிரியர் காட்டுகிறார். கற்பு குறித்த முற்போக்குச் சிந்தனை, விதவை மறுமணம், தவறுகளைச் சுட்டிக் காட்டும் பெண்கள், காதலை ஏற்காத சமூகத்தில் தன் மகளைக் காதலனுடன் இணைத்து வைக்கும் புரட்சிகரமான தாய், சார்பு நிலையற்ற பெண்கள் என பல்வேறுபட்ட முற்போக்கு ஆளுமையில் பெண்களைப் படைத்திருப்பது ஆசிரியரின் உள்ள ஆளுமையைப் பறைசாற்றுகிறது. மேலும் பெண்களே – பெண்களின் ஆளுமையைப் பறைசாற்றுகிறது. மேலும் பெண்களின் ஆளுமையையும், மனநிலையையும் புரிந்து கொள்ளும் இயல்பினர் என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. பெண்ணுக்குப் பெண்ணே பகை என்கிற கூற்றை ஆசிரியர் கட்டுடைக்கிறார். இவ்வாறு முற்போக்குடைய பெண்கள் மூலம் புதுமைச் சிந்தனைகளை ஜெயகாந்தன் தம் படைப்புகளில் வெளிக்கொணர்கிறார்.

**துணைநூற் பட்டியல்**

1. ஜெயகாந்தன், ஓர் இலக்கியவாதியின் கலையுலக அனுபவங்கள், தேன்மழைப் பதிப்பகம், சென்னை – 16, இரண்டாம் பதிப்பு, 1993.
2. நா. சந்திரசேகரன், நானும் என் எழுத்தும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை 113, முதற்பதிப்பு, 2001
3. ஜெயகாந்தன்(தொ.ஆ), நானும் எனது நண்பர்களும், தேன்மழைப் பதிப்பகம், சென்னை - 16, முதற்பதிப்பு, 1995.
4. இரா. காசிராசன் முதலானோர்(ப.ஆ), பழந்தமிழ்க் கட்டுரைகள், ஞானத்தமிழ் பண்பாட்டு ஆய்வு மன்றம், மதுரை, முதற்பதிப்பு – 2001.
5. இரா. மோகன், புனைகதைத் திறன், ஏரக வெளியீடு, மதுரை – 20, முதற்பதிப்பு, 1978.
6. இரா. பிரேமா, பெண்ணியம் – அணுகுமுறைகள், தமிழ்ப்புத்தகாலயம், சென்னை – 17, முதற்பதிப்பு, 1998.
7. சேது சொக்கலிங்கம்(ப,ஆ), ஜெயகாந்தன் சிறுகதைகள், கவிதா பப்ளிகேஷன், சென்னை – 17.
8. அறந்தை நாராயணன்(தொ.ஆ), ஜெயகாந்தன் பற்றி மார்க்சீய அறிஞர் ஆர்.கே. கண்ணன், ஜெயகாந்தன் மணிவிழா சிறப்பு வெளியீடு, நியூ செஞ்சரி புக் ஹவுஸ், சென்னை – 98
9. ஜெயகாந்தன், ஜெயகாந்தன் முன்னுரைகள், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை – 1, முதற்பதிப்பு, 1978.